செ. கு. எண்: 048 நாள்: 19.03.2018

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களின் இரங்கல் செய்தி – 19.3.2018**

---

ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆசிரமம், 11–வது பட்டத்தினை அலங்கரித்த ஸ்ரீரங்கம் ரங்க ராமானுஜ மகா தேசிகன் என்ற ஸ்ரீமத் ஆண்டவன் சுவாமிகள் இன்று **(19.3.2018)** நண்பகல் ஆசார்யனின் திருவடியை அடைந்தார் என்ற செய்தி அறிந்து மிகுந்த வருத்தமடைந்தேன்.

ஸ்ரீமத் ஆண்டவன் சுவாமிகள் அவர்கள் தனது பூர்வாசிரமத்தில் தமிழ் ஆசிரியராக பணிபுரிந்ததோடு, பல கருத்தரங்குகளில் கலந்து கொண்டு சொற்பொழிவுகளையும் ஆற்றியுள்ளார். இவர் ஸ்ரீமத் ஆண்டவன் கலைக்கல்லூரி, வேத பாடசாலை மற்றும் கோசாலை ஆகியவற்றை மடத்தின் பெயரில் மிகச்சிறப்பாக நடத்தி வந்தவர். இவர் ஆன்மீக பணிகளோடு, பல சமூக நலப் பணிகளையும் சிறப்பாக ஆற்றியுள்ளார்.

ஸ்ரீமத் ஆண்டவன் சுவாமிகள் அவர்களை இழந்து வாடும் ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆசிரமத்தினருக்கும், அவரது சிஷ்ய கோடிகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**